# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:-104** **தேதி:-10.01.2012.**

## இரண்டாவது சங்கம் அங்கீகரிக்கப்படவில்லை.

BSNL நிறுவனம் முன்னர் வெளியிட்ட 02.08.2007 மற்றும் 03.09.2007 ஆகிய தேதிகளிலிடப்பட்ட உத்தரவு எண்கள் BSNL/39-2/SR/2007 மற்றும் 18.02.2009 தேதியிடப்பட்ட BSNL/7-1/SR/2009 ஆகியவற்றின் தொடர்ச்சியாக 05.01.2012ல் BSNL/39-2/SR/2011 என்ற சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது.

அங்கீகரிக்கப்படாத சங்கங்களின் ஊழியர்களின் குறைகள் தொடர்பாகவும், இந்த நிறுவனத்தில் தொழில் அமைதியை காப்பாற்றுவது தொடர்பாகவும் (தற்போது உள்ள அங்கீகரிக்கப்பட்ட சங்கத்துடன் இரண்டாவது சங்கத்தை அங்கீகரிப்பது தொடர்பாக அல்ல) தான் இந்த உத்தரவு கூறுகிறது.

அனைத்து BSNL ஊழியர்களின் பிரச்சனைகளையும்/குறைகளையும் நிர்வாகத்துடன் விவாதிக்கும் உரிமையை அங்கீகரிக்கப்பட்ட சங்கத்திற்கு உண்டு என்பதை 05.01.2012 தேதியிட்ட சுற்றறிக்கை தெரிவிக்கிறது. கடந்த தேர்தலில் 15%க்கும் அதிகமான வாக்குகளை பெற்ற சங்கத்தை நிர்வாகம் சந்திக்கவும், அங்கீகரிக்கப்படாத சங்கங்கள் குறிப்பிட்ட ஒரு பிரச்சனையை எழுப்பும் சமயத்தில், நிர்வாகம் அது முக்கியமானது என கருதினால் அதை பரிசீலிக்கலாம் எனவும் மட்டுமே அந்த சுற்றறிக்கை கூறுகிறது. பேச்சுவார்த்தையோ அல்லது அதிகாரபூர்வமான சந்திப்பு என்கிற சலுகையையோ நிர்வாகம் தரவில்லை. ஆனால் நிர்வாகம் அதிகாரபூர்வமற்ற முறையில் யாரையும் சந்திக்கலாம். இது ஒன்றும் புதிதல்ல.

ஆனால், ஒரு சில இடங்களில் தங்களுக்கு அங்கீகாரம் கிடைத்து விட்டதாக, தங்களின் ஊழியர்களை திருப்திபடுத்த NFTE சங்கம் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறது. தற்போது அங்கீகரிப்பட்டுள்ள BSNLஊழியர் சங்கத்தின் அங்கீகார காலமான இரண்டு ஆண்டுகள் முடிந்த அடுத்த உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தல் வரும் வரை தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள சங்கத்தை தவிர வேறொரு சங்கத்தை நிர்வாகம் அங்கீகரிக்க முடியாது.

உண்மையில், முதல் சங்க அங்கீகார தேர்தல் சமயத்திலேயே,15 சதவிகிதத்திற்கும் அதிகமான வாக்குகளை பெற்ற அனைத்து சங்கங்களுக்கும் அங்கீகாரம் தேவை என BSNL ஊழியர் சங்கம் கோரிக்கை வைத்தது. NFTE சங்கம் அதனை எதிர்த்தது. முதல் அங்கீகார தேர்தலில் NFTE சங்கம் 35 சதவிகித வாக்குகளை மட்டுமே பெற்று அங்கீகார சங்கமாக இருந்தது. BSNL ஊழியர் சங்கம் சுமார் 30 சதவிகிதமான வாக்குகளை பெற்றிருந்தது. ஆந்திர மாநில சங்கம் தான் 15 சதவிகிதத்திற்கும் அதிகமான வாக்குகளை பெற்றதனால் அங்கீகாரம் வழங்க வேண்டும் என ஆந்திர உயர் நீதி மன்றத்தை அணுகியது. அப்போதும் NFTE சங்கம் அதனை எதிர்த்தது. ஆனால் இரண்டாவது சங்க அங்கீகார தேர்தலில் BSNL ஊழியர் சங்கம் வெற்றி பெற்ற பின், 15 சதவிகித வாக்குகளை பெற்ற சங்கத்திற்கும் அங்கீகாரம் தேவை என NFTE சங்கம் கோரிக்கை வைக்க ஆரம்பித்தது.

செப்டம்பர் 2011ல் ஜெய்பூரில் நடைபெற்ற BSNL ஊழியர் சங்கத்தின் மத்திய செயற்குழுவில் சங்க அங்கீகார விதிகளில் மாற்றம் கொண்டு வருவது தொடர்பாக விவாதிக்கப்பட்டது. விகிதாச்சார பிரதிநிதித்துவ அடிப்படையில் சங்கங்களுக்கு அங்கீகாரம் வழங்கும் வகையில் புதிய சங்க அங்கீகார விதிகள் உருவாக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என 28.12.2011 அன்று நிர்வாகத்திற்கு மத்திய சங்கம் ஒரு கடிதமும் எழுதியுள்ளது.

புதிய அங்கீகார விதிகள் உருவாக்குவது தொடர்பாக, நிர்வாகம் அனைத்து சங்கங்களின் கூட்டத்தை கூட்ட வேண்டும். தொழிலாளர் அமைச்சகம் 08.04.2011 அன்று L-52025/5/2011-IR(IMP-1) எண்ணில் ஒரு சுற்றறிக்கை வெளியிட்டது. அதன் அடிப்படையில் மத்திய தொழிற்சங்கங்களுடன் தொடர்ந்து விவாதித்து, இந்திய தொழிலாளர் மாநாடு மூலமாக ஒரு பரந்து பட்ட ஒற்றுமையை உருவாக்கி, அதில் CODE OF DISCIPLINE ல் திருத்தம் கொண்டு வருவது தொடர்பாக முடிவெடுக்கலாம் என கூறியுள்ளது.

எனவே மேலே சொல்லப்பட்ட நடைமுறைகள் மூலமாக சங்க அங்கீகார விதிகளில் மாற்றம் ஏற்படுத்தும் வரை BSNLல் ஒன்றுக்கும் மேற்பட்ட சங்கத்திற்கு அங்கீகாரம் வழங்க முடியாது. எனவே NFTE சங்கம் இரண்டாவது சங்கம் அங்கீகரிக்கப்பட்டது என்ற பிரச்சாரம் தவறானது. ஆதாரமற்றது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**S.செல்லப்பா**
**மாநில செயலாளர்.**